# அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 2016-2017ஆம் ஆண்டிற்கான தமிழ்த்துறை ஆண்டறிக்கை

- மாணவர்களின் நலனுக்காக ஜுன் முதல் மே மாதம் வரையிலான பாடவேளைநாள் திட்டம் எங்கள் பேராசிரியர்களால் எழுதப்படுகிறது.
- பாடவேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு பேராசிரியர்கள் தாங்கள் எடுக்க இருக்கும் பாடங்களை அதில் பதிவு செய்வர்.
- அலகுத்தேர்வு மாதம் ஒரு முறை நடத்தப்பட்டு மதிப்பெண்கள் வழங்கப்படுகின்றது.
- சுழற்சித்தேர்வு இரண்டு மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்பட்டு, அதில் மதிப்பெண்கள் குறைவான மாணவர்களைப் படிக்க வைத்து மீண்டும் மறுதேர்வு நடத்தப்படுகின்றது.
- ஒரு பருவத்திற்கு இரண்டு ஒப்படைப்புகள் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு மதிப்பெண் வழங்கப்படுகின்றது.

- மாதிரித்தேர்வு நடத்தி பருவத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்கிறோம். மாணவர்கள் பருவத்தேர்வில் எளிதில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் பொதுத்தமிழ் கேள்வி-பதில் வினாவங்கி தயார் செய்து மாணவர்களுக்கு வழங்குகிறோம்.
- 2016-2017-ஆம் ஆண்டிற்கான பருவத்தேர்வில் வெற்றிபெற்று முதல் இரண்டு இடங்களைப்பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கி ஊக்குவிக்கிறோம். அத்துடன் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஊக்கமளிப்பதுடன் குறைவான மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு அதிக பயிற்சியும் அளித்து வருகின்றோம்.

## வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம்

- அன்னை வேளாங்கண்ணி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம் 2011ஆம் ஆண்டு தொடங்கி, 2017 வரை சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

- ஏழாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கும் முத்தமிழ் மன்றம் இவ்வாண்டிலும் பல விழாக்களை நடத்தியிருக்கிறது. வீரமாமுனிவா் முத்தமிழ் மன்றத்தின் சாா்பாக இயல், இசை, நாடகத் தமிழ்ப்போட்டிகள் நடத்தப்பட்டன.

- இயற்றமிழ் போட்டிகளாகப் பேச்சு, கட்டுரை, கவிதை, ஓவியம், சிறுகதைப்போட்டிகளும் நடத்தப்பட்டன.

- இசைத்தமிழ்ப்போட்டிகளாக தமிழிசை, நாட்டுப்புறப்பாடல் போட்டிகளும் நடத்தப்பட்டன. இசை ஆர்வம் மிகுந்த மாணவர்களை மேலும் ஊக்குவிக்கும் வகையில் முனைவா் கி.தினேஸ்குமாா் அவர்களால் இசைப்பயிற்சியும் அளிக்கப்பட்டது. நாடகத்தமிழ்ப்போட்டிகளும் நடத்தப்பட்டன.

- 2016-2017ஆம் ஆண்டிற்கான வீரமாமுனிவர் முத்தமிழ் மன்ற தொடக்கவிழா 06.09.2016 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் இயல்,இசை,நாடகம் ஆகிய முத்தமிழையும் மாணவர்கள் நிகழ்த்தினர். கவிஞரும், திரைப்பட பாடலாசிரியருமான ***அறிவுமதி*** அவர்கள் சிறப்புரையாற்றினார்.
- 24.09.2016 அன்று எழுத்தாளரும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தினுடைய மாநிலத்தலைவருமான ***திரு.ச.தமிழ்ச்செல்வன்*** அவர்கள் **'வாசிப்பும் மறுவாசிப்பும்'** என்ற தலைப்பில் உரையாற்றினார்.

- 12.01.2017 அன்று திரைப்பட நடிகரான ***பூ ராமு*** அவர்களும், முனைவர் ***தெ.வெற்றிச்செல்வன்*** அவர்களும், **தமிழ் நாடகத்தோற்றம்,வளர்ச்சி** குறித்து சிறப்புரையாற்றினர்.
- 31.01.17 அன்று திரைப்படப்பாடகா் ஆந்தக்குடி.**இளையராஜா** அவா்களும் இசையமைப்பாளா் ***திரு.செல்வா*** அவா்களும் ***கவிஞர் சிகரன்*** அவா்களும் பங்கேற்று **நாட்டுப்புறப்பாடல்களின் செல்வாக்கு** குறித்து பேசியும், இசையுடன் பாடல்களைப் பாடியும் மகிழ்வித்தனா்.

- 21-02-17 அன்று தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் உலகத்தாய்மொழி நாள் விழா நடைபெற்றது. அவ்விழாவில் நம் கல்லூரி முதல்வர் **பெ.தேவநேசன்** அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள வீரமாமுனிவர்

முத்தமிழ் மன்றத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் எம் கல்லூரி சார்பாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

- வீரமாமுனிவர் முத்தமிழ் மன்றம் சார்பாக நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும், பங்குகொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ்களையும், பரிசாகப் புத்தகங்களையும் வழங்கி சிறப்பித்துள்ளோம்.

2016-2017ஆம்ஆண்டிற்கான பருவத்தேர்வில் முதல்இரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்களின் பட்டியல்

## முதலாமாண்டு - முதற்பருவம்

16LCT1 முதலாமாண்டு முதற்பருவம்

தேர்ச்சி பெற்ற சதவீதம் - 96.41%

முதலிடம் - தி.அன்பரசி (கணிதம்) - 91

இரண்டாமிடம் - பா.மதுமிதா (கணிதம்) – 86

## இரண்டாமாண்டு - நான்காம் பருவம்

RLCT3 இரண்டாமாண்டு மூன்றாம் பருவம்

தேர்ச்சிபெற்ற சதவீதம் - 98.75%

முதலிடம் - மு.விக்னேஷ் (கணிதம்) 94

ரெ.வினிதா (கணிதம்) 94

இரண்டாமிடம் - சி.விசாலி (கணிதம்) 93

ஏ.ஜோசப் சந்தோஷ் குமார் (கணிதம்) 93

சோ.சண்முகவள்ளி (கணிதம்) 93

2016-2017 நவம்பர்

16டஉவ1 முதலாமாண்டு-முதற்பருவம்

முதலிடம்- தி.அன்பரசி(கணிதம்)- 91

இரண்டாமிடம்- பா.மதுமிதா(கணிதம்)- 86

**RLCT3** இரண்டாமாண்டு-மூன்றாம் பருவம்

முதலிடம்- மு.விக்னே (கணிதம்)- 94

ரெ.வினிதா(கணிதம்)- 94

இரண்டாமிடம்-

சி.விசாலி(கணிதம்)- 93

ஏ.ஜோசப்சந்தோகுமார்(கணிதம்)- 93

சோ.சண்முகவள்ளி(கணிதம்) -93